



Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 | இதழ் -269 | 03.08.2024 | பக்கங்கள்: 09 | editorml21@gmail.com | விலை: 75/-

# எழுத்தில் தருவோருக்கே ஆதரவு!



## கல்முனையில் மு.கா பிரதித் தலைவர் ஹரீஸ் எம்.பி திட்டவட்டமாக அறிவிப்பு!

(எம்.ஆர்.எப்.யாஷ்பி)

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை முஸ்லிம்களின் 17 இலட்சம் வாக்குகளே தீர்மானிக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார். 02 ⏭

## இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு ஜனாதிபதி ரணில் நடவடிக்கை



இளைஞர்களுக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும் எனவும், அதற்காக அரச மற்றும் 02 ⏭

## ஜனாதிபதி தேர்தல்! யாரை ஆதரிப்பது? மக்கள் காங்கிரஸிற்குள் இரு அணிகள்

ஏ.எச்.எம்.பூமுதீன்

ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து ஆராயும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் விசேட உயர்பீடக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 06 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை 04 ஆம் திகதி என முன்னர் குறிப்பிட்ட உயர்பீடக் கூட்டம் தற்போது 06 ஆம் திகதிக்கு 02 ⏭

## சஜித்தை சந்திக்கவில்லை — நாமல்



தமக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஆலோசகர் ஆஷு மாரசிங்க தெரிவித்த கருத்து முற்றிலும் பொய்யானது என பொதுஜன 02 ⏭



## இலங்கையை மீளக்கட்டியெழுப்ப தொடர்ந்தும் IMF ஆதரவு

இலங்கை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார 02 ⏭

## எழுத்தில் தருவோருக்கு...

முஸ்லிம் சமூகத்தின் சமகால அரசியல் வகிபாகம் மற்றும் கல்முனையின் எதிர்கால நகர்வுகள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டும் பொதுக்கூட்டம் (01) வியாழக்கிழமை கல்முனை கடற்கரைப் பள்ளி முன்பாக இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதான பேச்சாளராக பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்,

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எந்த வேட்பாளர் தீர்வுகளை எழுத்து மூலம் தருகின்றாறோ அவருக்கு ஆதரவளிக்கவுள்ளோம்.

கடந்த 1994 ஆம் ஆண்டில் தலைவர் அஷ்ர.்.ப் பேரம் பேசும் சமூகமாக அன்றைய ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சமூகத்தை மாற்றியிருந்தார். அவ்வாறே இன்றைய ஜனாதிபதித் தேர்தல் சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் கிங் மேக்கர் சமூகமாக மாறியிருக்கின்றது. இதனை நாம் இலாபகரமாக பயன்படுத்தி எம்சமூகத்தின் அபிவிருத்திகள், உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

முஸ்லிம்களின் அதிக வாக்கு வங்கியைக் கொண்ட கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கின்றது, இதனடிப்படையில் தற்போதைய ஜனாதிபதி உட்பட ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசி எடுத்த வண்ணம் உள்ளனர். எனவே இவர்களுடன் கட்சி பேசி எதிர்காலத்தில் நல்ல தீர்மானங்களை எடுக்கும் என நம்புகின்றேன் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர்.அமீர், எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் ஆகியோரும் உரையாற்றியதுடன் கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதிமேயர் ஏ.ஏ. பஷீர், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் கல்முனை மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு...

தனியார் துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கடந்த 4 வருடங்களாக இலங்கையின் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முடியவில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டிருப்பதால் தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும், அதனால் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நேற்று (02) நடைபெற்ற இளைஞர் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை தெரிவித்தார்.

“செழிப்பான எதிர்காலத்திற்கான பயணம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் ஒருபோதும் மறக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். நிதிப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் இவ்வருடம் நிதி ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆசிரியர் சேவையில் புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கு அடுத்த வருடம் மேலதிக நிதியை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுயதொழிலில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்கு நிவாரணத்துடன் கூடிய கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், விவசாய நவீன மயமாக்கல் வேலைத்திட்டத்தில் இணைந்து இளைஞர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## சஜித்தை...

பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசகரின் கூற்றுக்களை மறுத்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, அந்தக் கூற்று முற்றிலும் பொய்யானது என்றும் அவ்வாறான சந்திப்பு எதுவும் நடைபெறவில்லை என்றும் அவரைச் சந்திக்க எனக்கு எந்த காரணமும் இல்லை என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க இது தொடர்பில் தெரிவித்தள்ள கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில், நாமல் தனது X கணக்கில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தல்! யாரை ஆதரிப்பது?

மாற்றப்பட்டுள்ளது.

கொழும்பு - வெள்ளவத்தை சுபுன் கட்டிடத்துக்கு அண்மையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் கூட்டத்திற்கான முன் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

(இந்த செய்திக்கு பின்னர் இடம் மாற்றப்படலாம்)

புத்தளம் எழுச்சி மாநாட்டில் கட்சித் தலைவரின் கேள்விக்கு இரு பதில்களை மக்கள் வழங்கினர். அதேபோன்று - கட்சியின் உயர்பீடத்திலும் இரு அணியினர் உருவாகி உள்ளனர்.

இதற்கிடையில் ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ரிஷாத் பதியுதீன் அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவரின் விடுதலை உறுதிப்படுத்தப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உரையை அடுத்துத்தான் என்பது பலரும் அறியாத உண்மை.

கடந்த பொதுத் தேர்தலில் - ரணிலை, இலங்கை மக்கள் தோற்கடித்தாலும் - அவர் உலக அரங்கில், மேண்மைமிக்க தலைவராகவே பார்க்கப்படுகின்றார். அவருக்கு உலகத் தலைவர்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு மதிப்பு இலங்கையில் வேறெந்த தலைவனுக்குமே இல்லை.

ரிஷாத் பதியுதீன் விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றிய பின்புதான் உலகத் தலைவர்கள், ரிஷாத் பதியுதீனின் சிறையடைப்பை கூர்ந்து அவதானிக்க தொடங்கினர். அதன் பின்னர் - கோட்டாவுக்கு ஏற்படுத்தப்பட்ட அழுத்தமே ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்ய கால்கோலாக அமைந்தது.

எனவே இதற்காகவாவது நன்றிக்கடனாக, ரிஷாத் பதியுதீன் தற்போது வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் ரணிலுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பது பலரது கருத்து.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து அண்மையில் அபிவிருத்தி நிதியாக பெற்ற 84 கோடி ரூபாவுக்கும் நன்றி செலுத்த வேண்டும் என்பது. இதனை வன்னி மக்களே கூறுகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவராக இருக்கும் ரிஷாத் - இஸ்லாமிய முறைப்படியாவது ரணிலுக்கு நன்றி செலுத்துவாரா? இல்லையா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

06 ஆம் திகதி - மக்கள் காங்கிரஸ் உயர்பீடம் கூடினாலும் அன்றைய தினமே - யாருக்கு ஆதரவு என்ற முடிவை கட்சி அறிவிக்காது என்றே பேசப்படுகின்றது. இரண்டு தினங்கள் கழித்தே முடிவை அறிவிக்க ஏற்பாடு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் - புத்தளம் எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்ட மக்களில் பலர் ரணிலை ஆதரிக்குமாறும் சிலரே சஜித்தை ஆதரிக்குமாறு கோஷமெழுப்பியதாகவும் அறிய முடிகின்றது.

புத்தளம் எழுச்சி மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆதரவாளர்களை நோக்கி யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்புவார்.

அதற்கு, கட்சி ஆதரவாளர்களும் பதிலும் கூறுவார்கள். ஆனால், அவர்கள் கூறும் பதில் தெளிவில்லாமல் இருக்கும். சத்தத்தால் எதுவுமே விளங்காது.

அதற்கு அவர்களில் பலர் கூறிய பதில்தான் ரணில் என்பதாகும்.

அடுத்து - உயர்பீடத்திலும் ரணில் ஆதரவு அதிகம் இருப்பதாக உயர்பீட உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

கட்சியின் தலைவர், தவிசாளர் உட்பட சுமார் 10 பேரின் பெயர்களை குறிப்பிட்ட அவர் - இவர்கள் ரணில் ஆதரவு நிலைப்பாட்டில் உள்ளதாக கூறினார். நன்றியின் வெளிப்பாடா இந்த ஆதரவு? என்ற கேள்விக்கு ”ஆம்” என்றார் அந்த உயர்பீட உறுப்பினர்.

முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப், ரியாஸ் சாலி, ஈரான் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டத்தரணி சஹீட் போன்றோர் இதில் அடங்குவர்.

அம்பாரை மாவட்டத்தில் உள்ள சிலர் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் முடிவை பொறுத்து எமது முடிவை அறிவிப்போம் என்ற நிலைப்பாட்டில் உள்ளனராம்.

ஏனையோர் - எதுவுமே அறியாத அவர்கள் சஜித் என்கின்றனராம் என்று நான் கூறவில்லை கட்சியின் அந்த உயர்பீட உறுப்பினரே சுட்டிக்காட்டினார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் - ஆதரவு யாருக்கு என்பதை அறிய 06,07,08,09 மற்றும் 10 ஆம் திகதி வரை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

## இலங்கையை...

சீர்திருத்தங்கள் தொடர்ந்து மூன்று காலாண்டுகள் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, குறைந்த பணவீக்கம், அதிகரித்த வருவாய் சேகரிப்பு மற்றும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் மீட்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதாக நேற்று (02) சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் பரந்த அடிப்படையிலான மற்றும் நிலையான பொருளாதார மீட்சியை உறுதிப்படுத்துவதற்கு சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் தீர்க்கமான முன்னேற்றம் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தூதுக்குழுவின் மூத்த அதிகாரி பீட்டர் ப்ரூயர் ”பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுதல் மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு நிதி வருவாயை உயர்த்துவதற்கு மேலும் முயற்சிகள் தேவை,” என்று சுட்டிக்காட்டினார்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'
Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# ஹமாஸ் தலைவரின் படுகொலை: உலகப் போராக மாறுமா?

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் அண்மையில் நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.



இஸ்ரேல் - ஹமாஸ் படைகளுக்கு இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகின்ற நிலையில், தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீதான தாக்குதலை இஸ்ரேல் படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன. இந்நிலையில் இஸ்ரேல் தரப்பில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஈரான் நாட்டின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் பங்கேற்க வந்தபோது தெஹ்ரானில் அவர் தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதல் மத்திய கிழக்கின் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன.

இரானில் உச்ச அதிகாரம் பெற்ற அதிஉயர் தலைவர் ஆயதுல்லா அலி காமனேயி, "ஹனியே கொலைக்கு பழிவாங்க வேண்டியது டெஹ்ரானின் கடமை" என்று கூறியுள்ளார்.

ஹனியேவை கோழைத்தனமாக கொலை செய்தமைக்காக இஸ்ரேல் நிச்சயம் வருத்தப் படும் என்றும், ஈரான் தனது பிராந்தியத்திற்கான ஒருமைப்பாடு, பெருமை மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கும் என்றும் ஈரான் ஜனாதிபதி மசூத் பேஸஷ்கியான் கூறியுள்ளார்.

### சீனாவில் கனமழையால் 11.5 இலட்சம் பேர் பாதிப்பு

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் பெய்த கனமழையால் 11.5 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் சுமார் 6.13 பில்லியன் யுவான் நேரடி பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூறாவளி மற்றும் கனமழையால் 95,000 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும், 1,07,500 ஹெக்டேர் பயிர்கள் நாசமாகியுள்ள நிலையில், 17,100 ஹெக்டேர் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள் ளன.

இந்நிலையில், வடமேற்கு ஹுனானில் அடுத்த ஓரிரு நாட்களுக்குக் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது

### தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்கு பலம் நிரூபிக்கப்படுமா?

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களை பொறுத்த வரையில் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்கு பலம் என்பது நாட்டின் ஜனாதிபதி மற்றும் இறையாண்மை கொண்ட பாராளுமன்ற ஆட்சி அமைப்பு என்பவற்றை தீர்மானிக்கும் சக்தியாக காணப்பட்டது.

இருந்த போதிலும் இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகளும், தமிழ் கட்சிகளும் தீர்க்கமான முடிவுகளை எடுக்க தவறியதன் விளைவாக ஜனாதிபதி வேட்பாளரான கோட்டபாய ராஜபக்ஷ அனைத்து பீடங்களையும் சேர்ந்த மகா சங்கத்தினரை சந்தித்து சிங்கள மக்களை ஓரணியில் திரட்டி இம்மக்களின் வாக்குகள் நாட்டின் ஜனாதிபதியை தீர்மானிக்கும் என்ற உண்மையை வெளிப்படுத்தினார்.

தற்போது நடைபெறவுள்ள 09 ஆவது ஜனாதிபதித் தேர்தல் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் தேர்தலாக அமையப் போகின்றது ஏனெனில் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் கடுமையான போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென் இலங்கையில் உள்ள மக்கள் கடந்த காலத்தில் பச்சை, நீல நிற கட்சிகளிடம் ஆட்சியை கொடுத்து வந்த போதும் அந்த ஆட்சி மக்களுக்கு போதியளவு அனுகூலமான சூழலை உருவாக்கவில்லை என்ற காரணத்தால் இந்த தேர்தலில் சிவப்பு நிற கட்சிக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நிலைப்பாடு பரவலாக காணப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்கு ஜனாதிபதியை தீர்மானிக்கும் வாக்குகளாக அமைய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆகையால் கடந்த காலங்களை போலல்லாது வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் இந்த ஜனாதிபதி தேர்தலில் தீர்க்கமான முடிவை எடுத்து தமது பிரதேச மக்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டும். இதனூடாக வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்கு பலம் நிரூபிக்கப்பட வேண்டும்.

editorml21@gmail.com

# பாடசாலை பையில் துப்பாக்கி:
## வகுப்பறையில் 3வது படிக்கும் மானவனை சுட்ட 5 வயது சிறுவன்

3வது படிக்கும் மாணவனை 5 வயது சிறுவன் பாடசாலையில் வைத்து துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




பீகார் மாநில, சுபால் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளியில் நேசரி படித்து வரும் 5 வயது சிறுவன் தனது பாடசாலை பையில் வீட்டில் இருந்து துப்பாக்கியை எடுத்து வந்துள்ளான். தனது பையில் இருந்த துப்பாக்கியை எடுத்து அதே பாடசாலையில் மூன்றாவது வகுப்பு படிக்கும் மாணவனை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளான். சுட வேண்டாம் என தடுக்க முயன்ற போது இதில் 3வது படிக்கும் சிறுவனின் கையில் காயம் ஏற்பட்டது. உடனே அந்த சிறுவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவனுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து துப்பாக்கியால் சுட்ட சிறுவனின் தந்தை தலைமறைவாகி விட்டார். அவரை பொலிஸார் தேடி வருகின்றனர். பாடசாலை அதிபரை கைது செய்து துப்பாக்கி எப்படி பாடசாலைக்கு வந்தது என விசாரித்து வருகின்றனர்.

மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் மாணவர்களின் பைகளை சோதனையிட அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் பொலிஸ் கண்காணிப்பாளர் கூறினார். சம்பவம் குறித்து கேள்விப்பட்ட பெற்றோர்கள் அச்சத்தில் பாசாலைக்கு ஓடி வந்து பாடசாலை நிர்வாகத் திற்கு எதிராக கோஷமிட்டனர்.

# அரச ஊழியர்கள் வெளிநாடு செல்ல தடை

கம்யூனிச நாடான சீனாவில், அரசு கட்டுப்பாடுகளின் காரணமாக தொலைக்காட்சி, சமூக வலைதளம், இணையம் போன்றவற்றில் அரசின் கண்காணிப்பு காணப்படுகின்றது.

அந்தவகையில், அரச இரகசியங்களை பாதுகாக்கும் நோக்கில், அரச ஊழியர்களுக்கு சீனா புதிய கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளது. அதன்படி அரச அதிகாரிகளுக்கு, இரகசியங்களை பாதுகாக்க பயிற்சி அளித்து, இரகசியங்களை கையாளும் ஊழியர்கள், முன் அனுமதியின்றி வெளிநாடு செல்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

அவ்வூழியர்கள் தங்களது பணியில் இருந்து விலகிய பிறகும், இரகசிய கட்டுப்பாடுகளை பின்பற்றுதல் அவசியமாகும்.

# கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவு: உயர்ந்துள்ள மரண எண்ணிக்கை!



கேரளா வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 168 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கேரள மாநிலம் வயநாட்டில் கடந்த 30ம் திகதி அதிகாலை 2 மணியளவில் திடீரென அடுத்தடுத்து பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

140 பேர் உயிரிழந்துள்ளதாக கூறப்பட்ட நிலையில் தற்போது பலியானோர் எண்ணிக்கை 168 ஆக உயர்ந்துள்ளது. தற்போது வரை இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 168க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் இதுவரை 1000க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிக்கியுள்ளவர்களின் நிலை என்ன என்பது தெரியாத நிலையில் மீட்புப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களை



மீட்கும் பணியில் இராணுவம் மற்றும் விமானப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். கடற்படையும் மீட்புப் பணியில் இணைந்துள்ளது.

இதே வேளை, வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. ஏற்கனவே தமிழ்நாட்டை சேர்ந்த காளிதாஸ், கல்யாண குமார், ஷிஹாப் ஆகியோரின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், கோவை மாவட்டம் வால்பாறையை சேர்ந்த 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் 6 பேரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




# கல்முனை திரு இருதயநாதர் ஆலய வருடாந்த திருவிழா

**(டினேஸ்)**

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள கல்முனை திரு இருதயநாதர் ஆலய திருவிழா திருப்பலியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பங்குத்தந்தையும் கல்முனை மறைக்கோட்ட குருமுதல்வருமான அருட்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

கடந்த 9 நாட்கள் மாலை வழிபாடுகள் இறைமக்களை தயார்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருப்பொருளை மையப்படுத்தியதாக இறைமக்களுக்கு சிந்தனைகள் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சனிக்கிழமை மாலை வேஸ்பர நற்கருணை ஆராதனை வழிபாடானது அருட்தந்தை ஹர்சதன் ரிச்சர்ட் அடிகளார் தலைமையிலும் இடம் பெற்றதோடு, இன்றைய திருவிழா திருப்பலியானது ரி.சகாயநாதன் அடிகளாரின் தலைமையில் பங்குத்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் அடிகளாரும், அருட்தந்தை அம்புரோஸ் அவர்களும் இனைந்து திருப்பலியினை ஒப்புக்கொடுத்து இறைவேண்டுதல் செய்தார்கள்.

இத்திருப்பலியில் அருட்சகோதரிகளும், அருட்சகோதரர்களும் மற்றும் பக்தர்ளும் கலந்து கொண்டதுடன் திரு இருதயநாதர் திருச்சுருப பவனி ஆலயத்தை சுற்றி பவனியாக எடுத்துவரப்பட்டதுடன்



திரு இருதயநாதர் புகழ்பாக்கள் இசைக்கப்பட்டு கவிகள் இசைக்கப்பட்டு இறுதி செபத்துடன் திரு இருதயநாதர் திருச்சுருப ஆசீரை பங்குத்தந்தை அருட்பணி லெஸ்லி ஜெயகாந்தன் அடிகளார் இறைமக்களுக்கு வழங்கி வைத்தார். மேலும் கொடி இறக்கத்துடன் திருவிழா நிறைவு பெற்றது.

## சிறுபோக வேளாண்மை அறுவடை

**(சைபுல் ஹபீஸ்)**

அம்பாரை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் சவளக்கடை கமநல சேவை நிலையத்தின் கீழ் சுமார் 8500 ஏக்கரில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய சவளக்கடை கமநல சேவை நிலையத் தின் கீழுள்ள நாவிதன் வெளி, மத்திய முகாம், சொறிக்கல்முனை, சடயந்தலாவ, சவளக்கடை போன்ற பிரதேசங்களில் செய்கை மேற்கொள்ளப் பட்ட வேளாண்மை தற்போது அறுவடை செய்யப்பட்டு ஒரு மூடை சுமார் 06 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவில் வேட்டைத்திருவிழா 2024





**கி.மிதுஷன்**

கந்தப்பாணத்துறையோன் என்று பெயரைக் கொண்டவனே அந்த ஊரின் பெயரை மாற்றி திருக்கோவில் என்றவனே. இந்து மகா சமுத்திரத்தின் முத்தென திகழும் இலங்கா புரியின் கிழக்கு மாகாணத்தின் தென்பால் பண்டைய நாகரிகமும் பண்டைய வரலாறுமிக்க தமிழ் பேசும் மக்கள் வாழும் பலம் பெரும் கிராமமாம் திருக்கோவில் சித்திரவேலனின் திருவேட்டைத் திருவிழா கடந்த வியாழன் (01) மாலை 03:00 மணிக்கு திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி திருக்கோவில் சகலகலை அம்மன் ஆலயமம் வரை வெகு விமர்சையாக சென்றடைந்தது.

இவ் வேட்டைத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டதோடு பல கலை நிகழ்வுகளும் வீதியில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் திருக்கோவில் சேவற்கொடியோன் அமைப்பினரால் இறைத்தொண்டுகள் இடம்பெற்றதோடு தாகசாந்தி நிகழ்வினையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அவற்றைத்தொடர்ந்து சிறப்பான முறையில் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் புடை சூழ இவ்வேட்டைத் திருவிழாவானது இடம்பெற்று மீண்டும் முருகப்பெருமானின் ஆலயத்தை வந்தடைந்தன.



புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சேவையாற்றி இலங்கை கல்வி நிருவாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

**(படம் : எம்.எச்.எம்.சியாஜ்)**

## சுற்றுமதிலுக்கு அடிக்கல்



**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

கல்முனை ரோயல் வித்தியாலய சுற்றுமதில் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியின் பயனாக பாராளுமன்ற உறுப்பினரின் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் சுற்றுமதில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கல்முனை ரோயல் வித்தியாலய அதிபர் எம்.எச்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கலை நாட்டி வைத்தார். இதன் போது அகில இலங்கை தமிழ் மொழித் தின கோட்டமட்ட



பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட மாணவி ஏ.ஆர்.எப். மினுபதிற்கு பிரதம அதிதியினால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. கலீல் ரஹ்மான், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாபா உட்பட பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## வாழ்த்து அட்டை போட்டியில் வெற்றி



**(எம்.எச்.எம் சியாஜ்)**

தேசிய கல்வி நிறுவகம் மற்றும் செனல் என்.ஐ.ஈ இணைந்து நடாத்திய தேசிய ரீதியிலான ”புதிய எண்ணங்கள் வண்ணங்கள் வழியே ” எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்து அட்டை வடிவமைத்தல் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இருந்து பங்கு பற்றிய தரம் 03 ஐச் சேர்ந்த மாணவன் எம்.ஏ அப்துல்லாஹ் வெற்றி பெற்றுள்ளார்.

அவருக்கான பரிசு மற்றும் சான்றிதழ் (26) மஹரகம தேசிய கல்வி நிறுவக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வின் வழங்கப்பட்டதாக பாடசாலையின் அதிபர் எம்.என்.எம் நஸ்றீன் தெரிவித்தார்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு






எம்.ஜி.ஏ.நாஸர்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களை உள்ளடக்கிய ஏறாவூர் - ஐயங்கேணி ஹிஸ்புல்லா வித்தியாலயத்திற்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஜி.ஏ.நாஸர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைக்கான பயன்பாட்டுப் பொருட்களும் கையளிக்கப் பட்டன.

ஏறாவூர் சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியத்திடம் பாடசாலை அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒபன் கெயார் இதற்கான நிதியுதவியினை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் ஏறாவூர் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி.நஜிமுதீன், சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் முகமட் பாறூக், அனைத்து பல்கலைக்கழக ஒன்றியத்தின் பிரதிநிதிகளாக முகம்மது நிம்சான், பேராதனைப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸ் பிரதித் தலைவி பாத்திமா தியானா மற்றும் பாடசாலையின் விசேட பிரிவு பொறுப்பாசிரியர் எம்.ஏ.எம்.சுபுஹான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருமலையில் யானை தாக்கி நபர் ஒருவர் பலி

ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 5ஆம் கட்டை கடவான காட்டுப்பகுதியில் யானை தாக்கி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த சடலம் மீட்கப்பட்டதாக உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு யானை தாக்குதலில் உயிரிழந்தவர் குறித்த பிரதேசத்தில் மாடுகளை மேய்ப்பதற்காக குறித்த காட்டுப்பகுதிக்குள் சென்றிருந்த வேளையில் யானை தாக்குதலுக்கு உள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு யானை தாக்குதலில் உயிரிழந்தவர் கே.ஜி நிலந்த இந்துனில் (வயதில்-44) என அடையாளம் காணப்பட்டுள்ள துடன், மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்

## சென் நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை கட்டிடம் திறந்து வைப்பு

தில்சாத் பர்வீஸ்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சென் நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை கட்டடம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சென் நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை அதிகாரி டாக்டர். எம்.டி.சரசி பிரார்த்தனா விஜயசூரியா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வைத்தியசாலையினை தரமுயர்த்த வேண்டும் எனவும், 24 மணிநேரம் இயங்கக்கூடிய வைத்தியசாலையாகவும் மாற்ற வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம் கோரிக்கை விடுத்தார்

இக் கோரிக்கையை ஏற்று கொண்ட ஆளுனர் வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் வண்டி ஒன்றை பெற்றுத்தருவதாகவும், எதிர் வரும் காலங்களில் ஆண்கள், பெண்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான கட்டடம் ஒன்றை அமைத்து தருவதாகவும், 24 மணிநேரம் இயங்கக்கூடிய வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதாக வாக்குறுதி அளித்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார முன்னாள் ராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் உ.ஜி.எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை டாக்டர்.டி.பார்பசங்கர், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நளீம் ஜனாப், பொலிஸ் உயர் அதிகாரிகள், வைத்தியர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கையின் தணிக்கை சபை உறுப்பினராக ஹில்மி முஹம்மத் நியமனம்

அலுவலக செய்தியாளர்



இலங்கை ஜனநாயகக் குடியரசின் தணிக்கை சபை உறுப்பினராக "மாத்ய கீர்த்தி" அல்ஹாஜ் ஹில்மி முஹம்மத் நியமனம் செய்யப்பட்டு இவருக்கான நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறைப் பட்டதாரியான இவர், இலங்கை நிர்வாக சேவை உறுப்பினராக இருந்து பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தவராவார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சு, துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி அமைச்சு, நீர் வளங்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சு, அரசாங்க தகவல் திணைக் களம் மற்றும் கலாசார அமைச்சு முதலான நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார்.

மள்வானையைச் சேர்ந்த மர்ஹூம்களான ஹில்மி மத்திச்சம், அஸ்மா உம்மா தம்பதியினரின் புதல்வரான இவர் மல்வானை அல் முபாரக் மற்றும் கம்பளை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவராவார்.

மலேசியா, இந்தியா, வியட்நாம், பாகிஸ்தான் மற்றும் மாலைத்தீவு முதலான நாடுகளில் ஊடகத்துறை தொடர்பான பயிற்சிகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விசேட கௌரவம்







(அலுவலக நிருபர்)

எக்ஸத் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் தேசத்திற்காய் நாம் பிரஜை விருது வழங்கும் நிகழ்வு புதிய காத்தான்குடி அல்- மனார் அறிவியல் கல்லூரியின் அப்துல் ஜவாத் மண்டபத்தில் (27) எக்ஸத் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எல்.எம்.ஷாஜஹான் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும் தேசத்திற்கு பங்காற்றியவர்களுக்கும் கௌரவமளிக்கப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ், கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில். பேராசிரியர் கலாநிதி இஸ்மாயில். கலாநிதி ஏ.எ.எம்.நுபைல் ஆகியோர் கலந்து கொண்டதுடன்

சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அகமட் மட்டக்களப்பு வர்த்தகசங்கத் தலைவர் கே.எம்.கலீல், காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் மர்சூக் அகமட் லெவ்வை உட்பட புத்திஜீவிகள், ஊடக பிரமுகர்கள், ஊடகவியலாளர் கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகள் மற்றும் தேசத்திற்கு பங்காற்றியவர்கள் 50 பேர்கள் கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஊடகவியலாளர் பாறுக் ஷிஹானுக்கு விஷேட கௌரவம்



எக்ஸத் ஊடக வலையமைப்பின் 2024ம் ஆண்டுக்கான "தேசத்துக்காய் நாம் பிரஜை விருது" சேவைநலன் பாராட்டு விழாவில் ஊடகவியலாளர் பாறுக் ஷிஹான் விருது மற்றும் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

தமிழ்,முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திற்காகவும் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் அவலங்களை உள்நாட்டிலும் சர்வதேச ஊடகங்களுக்கும் செய்திகளாக உடனுக்குடன் கொண்டு செல்வதன் காரணமாக ஊடகத்துறைக்கு ஆற்றி வரும் பங்களிப்புக்காக கௌரவமளிக்கப்பட்டார்.

# பெண்ணியல்

## நோய் என்றால் என்ன?



பெண்ணியல் நலம் என்பது ஆண்களோடு ஒப்பிடுகையில் மிகவும் தெளிவாக வேறுபடுகிறது. பெண்கள் சந்திக்கும் மிகப்பெரிய மாற்றங்களாக ஓமோன் மாற்றங்களும், மாதவிடாய் பிரச்சினைகளும், கருவுறுதல் பிரச்சினைகளும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. பூப்படைந்த காலம் முதல் மாதவிடாய் நிற்கும் காலம் வரை இப்பிரச்சினைகளுக்கு உட்பட்டே ஆகவேண்டும். இவ்வாறு பெண்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் எதிர்நோக்கும் உடலியல், உளவியல் ரீதியான பிரச்சினைகளை பொதுவாக பெண்ணியல் நோய்களாக இருக்கின்றது.

பெண்களை அதிகளவு பாதிக்கும் நோய்களின் பட்டியலை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. அதில் கர்ப்பப்பை வாய்ப்புற்று நோய், மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய், பெண் பிறப்புறுப்பு நோய், பாதுகாப்பற்ற உடலுறவினால் ஏற்படும் பாலியல் நோய் ஆகியவற்றைத் தொடர்ந்து ஏற்படும் மனநல பாதிப்பு பற்றி சுட்டிக்காட்டியுள்ளது.

மருத்துவத்துறை அதிவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் பெண்கள் மருத்துவ ரீதியாக பல்வேறு விழிப்புணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், அந்தரங்க உறுப்புகளில் எரிச்சல், அரிப்பு, நமைச்சல் கட்டி, புண், வீக்கம் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்போது அதைப்பற்றி வெளியில் பேசுவதற்கும் மருத்துவரிடம் ஆலோசனை பெறுவதற்கும் தயக்கம் காட்டுகின்றனர் இவை குறித்து வெளிப்டையாக வைத்தியர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று சிகிச்சை பெறாவிட்டால் அது ஆபத்தை விளைவிக்கக்கூடும்.

எனவே ஒவ்வொரு பெண்ணும் இது குறித்து விழிப்புணர்வுடன் இருப்பது மிக அவசியமாகும்.

பெண்களின் இனப்பெருக்க உறுப்பான பிறப்புறுப்பில் ஏற்படும் மாற்றங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். பெண்களின் வயதுக்கேற்ப சந்திக்கும் பிரச்சினைகளிலும் மாற்றங்கள் ஏற்படலாம். இதைத்தவிர பெண் பருவமடைதலைத் தொடர்ந்து ஏற்படும் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகள், பிற்காலத்தில் மாதவிடாய் நிற்கும் காலப்பகுதியில் ஏற்படும் பிரச்சினைகள் யாவுமே இதில் உள்ளடங்கும். இருப்பினும், பெண்கள் எதிர்நோக்கும் சில குறிப்பிட்ட நோய்களைப் பற்றிப் பார்த்தால் பெண் உறுப்பில் அரிப்பு, வெள்ளைப்படுதல், பக்டீரியாத் தொற்றுக்கள், பருக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக, பெண் உறுப்பில் பருக்கள் ஏற்படல், சிறுநீர்ப்பைத் தொற்று, பிறப்புறுப்பில் அரிப்பு ஏற்படுதல் போன்றன முக்கிய காரணிகளாக இருக்கின்றது. அதாவது,

பெண் உறுப்பில் பருக்கள் ஏற்படல் - பருவமடையும் நேரங்களில் இது உருவாகக்கூடும். இருப்பினும் இவை தானாகவே மாறிவிடக்கூடியது. அவ்வாறு மாறாவிட்டால் மயிர்க் கால்களை அடைத்து அந்த இடத்தில் மேலும் தொற்றை அதிகரிக்க வாய்ப்புண்டு. இது போன்ற புண்கள், கட்டிகள் கருப்பப்பை குறைபாட்டினாலும் ஏற்படுகின்றது. இதிலிருந்து விடுபட சுத்தத்தைப் பேணி சுகாதாரமான உள்ளாடைகளை உபயோகிப்பது மிக அவசியமாகும்.

சிறுநீர்ப்பைத் தொற்று – ஆண்களை விட பெண்களுக்கு ஏற்படுகிறது. அதாவது குறுகிய சிறுநீர்ப்பை பெண்களுக்கு இருப்பதால் எளிதில் சிறுநீர்ப்பாதைத் தொற்றுக்குள்ளாகி விடுகிறார்கள். பெண்களின் சிறுநீர்ப் பாதையை பக்டீரியாக்கள் மிக வேகமாக அடைந்து அங்கு நோய்த் தொற்றை உருவாக்கி விடுகின்றது. எமது அந்தரங்கப் பாதைகளை சுத்தமாக வைத்திருப்பது நல்லதாகும்.

சிலருக்கு சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் உண்டாகிறது. சில நேரங்களில் இறுக்கமான ஆடை கூட அரிப்பை ஏற்படுத்தக்கூடும். சவர்க்காரத்தை அதிகமாக உபயோகிப்பதால் கூட இந்நிலமை ஏற்படலாம். பெண் உறுப்பு மென்மையானது என்பதால் எளிதில் தொற்றுக்குள்ளாக வாய்ப்புண்டு. இந்த உறுப்பு ஓமோன் மாற்றங்களுடன் எளிதாகத்தொடர்பு கொண்டது. பெண் உறுப்பில் ஆசன வாய், சிறுநீர்த்துவாரம், பெண்ணுறுப்பு என்பன அருகருகே இருப்பதனால் ஏதும் ஒன்றில் தொற்று ஏற்பட்டால், அடுத்தடுத்து எளிதில் பரவுகின்றது. இதற்குப் பொதுவான காரணம் சுகாதாரமின்மையே ஆகும். இருப்பினும் அளவுக்கதிகமான அரிப்பு இருப்பின் வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது. ஏனெனில் எல்லாக் காலங்களிலும் அரிப்பு இருப்பின் அது பெண் உறுப்பில் தொற்றாகவோ அல்லது திருமணத்துக்குப் பின்னரான பாலியல் நோய்களுக்கான அறிகுறியாகவோ இருக்கலாம்.

திருமணமான புதிதில் சிலருக்கு ஏற்படக்கூடும். இந்நிலை தொடர்ச்சியாக அல்லது அடிக்கடி தொடருமானால் பால்வினைத் தொற்றாகவும், மாதவிடாய்க்கு முன்புஈஸ்ட்ரஜன் ஓமோன் செயற்பாட்டாலும் ஏற்படலாம். 40 வயதிற்கு மேல் மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஓமோன் சுரப்பு குறைவடையத் தொடங்கும். அதிகமாக இவ்வயதினரே எரிச்சலுக்குள்ளாகின்றனர். ஏனெனில், அக்கால கட்டத்தில் ஏற்படும் வரட்சித்தன்மையே இதற்குக் காரணமாகும்.

அதிகப்படியான சீனியினளவும் அரிப்பை ஏற்படுத்துவதற்கு ஒரு காரணமாகவும் இருக்கின்றது. பெண்களின் பிறப்புறுப்புப் பகுதியில் இயற்கையாகவே குறிப்பிட்டளவில் பக்டீரியாக்கள் காணப்படுகிறது. அவற்றின் இயற்கைச் சமநிலை மாறும்போதும், அந்தரங்க உறுப்பை சுத்தமாக வைத்திருப்பதாகக் கருதி பலவிதமான வாசனை சோப் வகைகள், பவுடர்கள் என்பவற்றை உபயோகிப்பதனாலும், உள்ளாடைகளை சுத்தமின்றி பாவிப்பதனாலும், இளம் வயது பெண்கள் சவரம் செய்வதாலும் மயிர்க்கால்கள் பாதிப்படைந்து தொற்று ஏற்பட்டு அரிப்பு ஏற்படுகின்றது.

மன அழுத்தத்தால் ஓமோன்களின் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவதாலும், மறைமுகமாக நோய் எதிர்ப்புச் சக்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவதாலும் இவ்வாறான நிலைமைகள் உண்டாகின்றன.

மேலும், பால்வினை நோயின் தாக்கம், சுகாதாரமற்ற கழிப்பறைகளை உபயோகித்தல், மலக்குடலிலுள்ள புழுக்கள் ஆசன வாயில் வந்து முட்டை இடும்போதும், சிறுநீர்த்தொற்றுக்கள் வழியாகவும், வெள்ளைப்படுதல் மூலமும் அரிப்பு ஏற்படுகின்றது.

சுகாதார முறைப்படி கழிவறைகளை உபயோகித்தல், உள்ளாடைகளை சுத்தமாகப் பயன்படுத்தல், மாதவிடாய்க் காலங்களில் தினமும் குளித்தல், உள்ளுறுப்புக்களை மென்மையாக சவர்க்காரம் மற்றும் மிதமான சுடுநீரில் தினமும் கழுவுதல் போன்றவற்றை செய்வதன் மூலம் இதிலிருந்து பாதுகாப்புப் பெறலாம். மேலும், மன அழுத்தத்தை தவிர்க்க தியானம், மூச்சுப் பயிற்சி போன்றவற்றை மேற்கொள்தல், 45 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் திருமணமான பெண்கள் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து சிகிச்சைகளை மேற்கொள்ளல், இளம் வயது பெண்களுக்கு இந்நிலை தொடருமெனின் வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளல் வேண்டும். வெள்ளைப்படுதல் என்பது ஒரு நோயல்ல. பூப்படைதலைத் தொடர்ந்து ஓமோன்களின் ஏற்ற இறக்கத்தால் பெண் உறுப்பினூடாக வெள்ளை நிற திரவம் போன்ற பதார்த்தம் வெளியேறுதலாகும்.

பெண்ணுறுப்பின் ஈரப்பதத்தைப் பேணுவதற்கும், இயற்கையாக அரிப்பு இல்லாமல் பாதுகாப்பதற்கும் திரவம் சுரக்கின்றது. இச்சுரப்பு சுரக்கும் வரை ஏதும் பிரச்சினை இல்லை. ஆனால் நிறம் மாறி, சளித்தன்மை போன்று காணப்படுமாக இருந்தால் அசாதாரண நோய் நிலைமையாக இருக்கின்றது.

இயற்கையில் பெண்ணுறுப்பு வாயிலில் சமநிலையைப்பேணும் சில பக்டீரியாக்கள் காணப்படுகின்றன. இவை மணமோ நிறமோ கொண்டிருப்பதில்லை. சுகாதாரமின்மை, முறையற்ற சவர்க்காரப் பாவனை அழற்சி, நீரிழிவு உடல்காங்கை, பெண்ணுறுப்பு எரிச்சல், ஈஸ்ட் தொற்றுக்கள், மன அழுத்தங்கள், புறப்புக்கட்டுப்பாட்டு மாத்திரைகள் பயன்படுத்தல் மற்றும் பாலியல் நோய்கள், கர்ப்பப்பை புற்றுநோய் போன்ற இதற்கு காரணங்களாக அமைகின்றது. எனினும் கர்ப்ப காலங்களில் இது இயற்கையில் ஏற்படக்கூடிய நிகழ்வாகும்.

பிசுபிசுப்புத்தன்மை கொண்ட இத்திரவம் பாதிப்புக்குட்பட்டால் அதன் அமில காரத்தன்மை பாதிப்படையும். தொற்று மேலும் தீவிரமடைந்தால் சிறுநீர்ப்பையையும், கர்ப்பப்பை வாயையும் பாதிக்கக்கூடும்.

கர்ப்ப காலத்தில் ஓமோன்களின் செயற்பாடுகளின் மாற்றத்தினால் அரிப்பு, எரிச்சல் மற்றும் வெள்ளைப் படுதல் போன்ற நிலை உண்டாகலாம். கருக்கலைப்பு, குறைப்பிரசவம், தன்னிச்சையான பிரசவம் அம்னியோட்டிக்தொற்று போன்ற நிலைகள் உருவாகலாம்.

இதற்கு முறையான சுகாதார நடைமுறைகள், பருவ காலங்களுக் கேற்ப சீரான உணவுப் பழக்க வழக்கங்கள், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறைமை, மன அழுத்தமின்மை என்பன சிறந்த தீர்வுகளாகும். எனினும், மேற்குறிப்பிட்ட அசாதாரண நிலைமை காணப்படுமிடத்து வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். கர்ப்ப காலங்களில், இந்நிலை காணப்பட்டால் அசமந்தப்போக்கில் இல்லாது மகப்பேற்று வைத்தியரை அணுகி ஆலோசனை பெறவேண்டும்.



மட்டு. துஷாரா

# மொட்டு ஆதரவு இல்லாமல் ரணில் வெல்லுவாரா?



எந்த ஒரு விடயத்திற்கும் இரு பக்கங்கள் இருப்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. மொட்டுவானது ஜனாதிபதி ரணிலை ஆதரிக்க மறுத்துள்ளதில் ஜனாதிபதி ரணிலுக்கு சாதகமும் உள்ளது, அதே நேரம் பாதகமும் உள்ளது. சிலர் இதற்கு அப்பால் சென்று இதுவும் ஜனாதிபதி ரணிலுடைய கேம் தான் என கூறுவதையும் அவதானிக்க முடிகிறது. தற்போது நடைபெற்றுள்ள சில விடயங்களை உற்று நோக்கும் போது இதிலுள்ள உண்மைகளை அறிந்துகொள்ள முடியும்.

தற்போதைய நிலையில் மொட்டு அணியை அதிகமான மக்கள் ஆதரிக்க தயாரில்லை. மீண்டுமோர் போலின் யுகத்தை கனவிலும் நினைக்க முடியாதல்லவா? ஜனாதிபதி ரணிலை மொட்டு அணி ஆதரித்தால், முக்கிய அரசியல்வாதிகள் பலர் ரணிலை ஆதரிக்க தயங்குவார்கள், ஆதரிக்கமாட்டார்கள். இவ்விடயத்தில் குறிப்பாக ராஜித, பொன்சேகா, சம்பிக்க உட்பட பலரை கோடிட்டு குறிப்பிட முடியும். தற்போது ஜனாதிபதி ரணிலை மொட்டணி எம்.பிக்கள் ஆதரிப்பதை விட, அவர்களுக்கு எதிர் முகாமில் உள்ளோரே ஆதரிப்பது பொருத்தமானது. அவர்களையே பிரச்சாரத்திற்கு பயன்படுத்தலாம்.

இத்தேர்தலில் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவு அபரிதமானது. முஸ்லிம்களின் பேராதரவு பெற்ற கட்சிகளான மு.கா, அ.இ.ம.கா ஆகியவை ஜனாதிபதி ரணிலை மொட்டு ஆதரித்தால், ஒரு போதும் ரணிலை ஆதரிப்பது பற்றி சிந்திக்கமாட்டார்கள். தற்போது மொட்டு ரணிலிடமிருந்து விலகி சென்றுள்ளதால் முஸ்லிம் கட்சிகள் ரணிலை ஆதரிப்பதை பற்றி சிந்திக்கலாம். அது தவறுமில்லை. இதுவே தமிழ்க் கட்சிகளின் நிலையும் கூட.

எதிர்வரும் தேர்தல் பிரச்சாரங்கள் நாட்டை கட்டியெழுப்புவதையே அடிப்படையாக கொண்டிருக்கும். நாட்டை கட்டியெழுப்புவது பற்றி பேசுவதாக இருந்தால், நாட்டை நாசப்படுத்தியவர்கள் பற்றியும் பேசத்தானே வேண்டும். இவற்றை வைத்தே ரணில் பிரச்சாரமும் செய்ய முடியும். ராஜபக்ஷவினரின் ஊழலை வெளிப்படுத்தி, அவர்களது பணத்தின் மூலம் நாட்டை மீட்போம் என்பது ஜே.வி.பியின் பிரதான பேசு பொருளாக இருக்கும். ராஜபக்ஷவினரை மேடையில் வைத்துக்கொண்டு, ராஜபக்ஷவினரோடு கூட்டணி வைத்துக்கொண்டு, இதுவெல்லாம் பேச முடியுமா? இதனையெல்லாம் ஈடுதான் கொடுக்க முடியுமா?

மேலுள்ள விடயங்களை வைத்து நோக்கும் மொட்டு, தனது ஆதரவை விலக்கியதில் ரணிலுக்கு பல நன்மைகளும் உள்ளன என்பது வெளிப்படையானது. இந்த நன்மையில் உள்ள ஒரு முக்கிய வினா என்னவென்றால், சிறுபான்மை கட்சிகளும், ஐ.ம.சவை சேர்ந்த முக்கியஸ்தர்களும் ரணிலை ஆதரிப்பார்களா என்பது தான்.

இதுவரை அப்படி எந்த அறிகுறிகளையும் காணவில்லை. சிறுபான்மைக் கட்சிகளில் மனோ அணி சஜிதை ஆதரிக்கும் முடிவில் உறுதியாக உள்ளது. ஹக்கீமும் சஜிதை ஆதரிக்கவுள்ளதாக கூறியுள்ளார். நிலை இப்படி சென்றால் மொட்டணி ரணிலை ஆதரிக்காமையில் பயனல்ல என்றே கூற முடியும்.

மொட்டு என்பது சாதாரண ஒரு கட்சியல்ல. என்னதான் இருந்தாலும் அதனால் 10 - 15 இலட்சம் மக்களையாவது ஒன்றிணைக்கும் ஆற்றலுடையது. இன்றும் மஹிந்த மீது மக்கள் அபரிதமான ஒரு கௌரவத்தை வைத்துள்ளனர். அவருக்கு பௌத்த மதகுருமார்களிடேயே ஒரு சொல்லுமளமான கௌரவமும் உள்ளது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பல முனை போட்டி நிலவுவதால், குறுகிய வாக்குகளுக்குள் வெற்றி வாய்ப்பு தீர்மானிக்கப்படும். சிறிய வாக்குகளும் பெரும் தாக்கம் செலுத்தும். இதனடிப்படையில் நோக்கும் போது இது ரணிலுக்கு பாதகம் எனலாம். மொட்டுவின் அவசியம் உணர்ந்து தான் ரணில் மஹிந்தவுக்கு கடிதம் எழுதியிருந்தார் எனலாம். இன்றும் மற்றுமொரு சந்திப்பை மேற்கொண்டுள்ளார். ரணிலின் இச் செயற்பாடானது மொட்டுவின் அவசியத்தை உறுதி செய்வதாக அமைகிறது.

மொட்டு ரணிலை ஆதரித்திருந்தால், ரணிலின் வாக்கை ஒரு 10 - 15 இலட்சத்திலிருந்து எண்ண தொடங்கியிருக்கலாம். இப்போது மொட்டின் 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை ஆதரிப்பதாக கூறுகிறார்களே என கேட்கலாம். உண்மையில் அந்த 92 பேரும் யார் என்பது இன்னும் பெயர்களோடு தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை. இந்த எண்ணிக்கை உண்மையென்றால் பெயரோடு வெளிப்படுத்தியிருக்கலாமே! முதலில் இந்த எண்ணிக்கையில் ஒரு பாரிய சந்தேகம் நிலவுகிறது.

92 என்பது உண்மையாக இருந்தால், அது பாரிய எண்ணிக்கை என்பதை யாராலும் மறுக்க முடியாது. இவர்கள் எவ்வாறு தெரிவானார்கள் என யோசிக்கும் போது, இவர்களது ஆதரவின் பெறுமதியை உணர்ந்து கொள்ளலாம். கடந்த பாராளுமன்ற தேர்தலில் மஹிந்தவின் மனத்தில் வீசிய, மொட்டலையால் தேர்தெடுக்கப்பட்டவர்களே இவர்கள். இதிலுள்ள பெரும்பாலானோர் புது முகங்கள். இதிலுள்ள பலர் தேர்தலொன்று நடந்தால் முகவரியற்றுப் போவார்கள். இங்கே எண்ணிக்கையில் 92 என கூறினாலும், அதில் கால், அரை டிக்கெட்களே அதிகம் எனலாம்.

கடந்த 2020ம் ஆண்டு நடைபெற்றிருந்த பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே.க ஒரு பாராளுமன்ற உறுப்பினரை கூட பெறும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. அன்று அதனை பழம் பெரும் அரசியல் வாதிகள் 20 - 30 பேர் ஆதரித்திருந்தனர். அனைவரும் படுதோல்வியடைந்தனர். ரணில் 2015 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் பெற்ற வாக்கின் அரைவாசியையே ஐ.தே.க நாடு முழுவதும் பெற்றிருந்தது. இதனை வைத்து நன்கு சிந்திக்கும் போது வாக்கு எண்ணிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களில் தங்கியில்லை என்பது தெளிவானது. நாட்டில் நடந்து, ஓய்துள்ள அரகல போராட்டமானது முழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிரானது என்பதை இவ்விடத்தில் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

தற்போது ரணிலை ஆதரிக்கும் மொட்டணியினர் ரணிலின் ஆற்றல்கண்டு, வியந்து ரணிலை ஆதரிக்கவில்லை. அவ்வாறு ஆதரிப்பதாக இருந்தால் எப்போதே ஆதரித்திருப்பார்கள். ரணிலுக்கு புதிதாக மூளை முளைக்கவில்லையே! மொட்டணியின் பெயரை கூறி, அவர்களால் மக்களிடம் சென்று, வாக்கை பெற முடியாது. அவர்கள் மீது சுய நம்பிக்கை இருந்தால், மொட்டை ஆதரித்து மக்களிடம் சென்றிருப்பார்கள். தாங்கள் மக்களிடம் செல்வதற்கான ஒரு வழியாகவே ரணிலை தெரிவு செய்துள்ளார்கள். அதற்காக 92 என்ற எண்ணிக்கையை சாதாரணமாக நோக்க முடியாது. அது ஒரு பாரிய எண்ணிக்கை தான்.

தற்போது மொட்டு அணியானது கட்சி ரீதியாக ரணிலை ஆதரிக்கவில்லை. மொட்டு உறுப்பினர்களில் பலர் ரணிலை ஆதரித்துள்ளார்கள். இவ் விரண்டும் ரணிலுக்கு மிக சாதகமானவை. இவ் விடயமானது பூச்சியத்தில் உள்ள ரணிலுக்கு உறுதிய அடித்தளத்தை வழங்கியுள்ளதை துல்லியமாக்கின்றது. இதனோடு சேர்த்து ஐ.ம.சக்தியில் உள்ள பலரும் இணைந்தால் தான் (சிறுபான்மை கட்சிகள், ராஜித, சம்பிக்க, பொன்சேகா உட்பட மேலும் பலர்) ரணிலின் மந்திர ஓதல்கள் செயற்பாட்டிற்கு வரும். இவர்களை மாத்திரம் வைத்துக் கொண்டு அரசியல் செய்ய முற்பட்டால் ரணில் மொட்டுவின் புரொக்சியாவே மக்களால் நோக்கப்படுவார், நிராகரிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை.

**தற்போது மொட்டு அணியானது கட்சி ரீதியாக ரணிலை ஆதரிக்கவில்லை. மொட்டு உறுப்பினர்களில் பலர் ரணிலை ஆதரித்துள்ளார்கள். இவ் விரண்டும் ரணிலுக்கு மிக சாதகமானவை**





**ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்**
**சம்மாந்துறை.**


This Time in Sri Lanka!
ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්
sky தமிழ் Media Network
Reg No: PV 00249082
துணிந்தெழு
sky தமிழ் AWARDS SRI LANKA -2024-
இலங்கை ஆளுமைகளை
கௌரவிக்கும்
ஸ்கை தமிழ் விருது – 2024
NOMINATIONS NOW OPEN !
விருது வகைகள்:
ஊடகம் மற்றும் பத்திரிகை
இலக்கியம்
சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்
கலை / கலாச்சாரம்
விளையாட்டுத்துறை
சமூக சேவை
வணிகம் / தொழில்முனைவோர்
கல்வி / தொழில்நுட்பம்
விவசாயம்
சிறப்பு விருது
APPLY NOW
விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி
31 ஆகஸ்ட் 2024
skytamilawards
இன்றே உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.
Visit our website: www.awards.skytamilnews.com
OFFICIAL PRINT MEDIA PARTNER : தினகரன் வாரமஞ்சரி
SUPPORTING PARTNER
CEYLON MEDIA FORUM
DIGITAL MEDIA PARTNER
Metro மெட்ரோ லீடர் LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

sportsml77@gmail.com

# SPORTS லீடர்

## ஆசிய மகளிர் கிரிக்கெட் மகுடம் இலங்கைக்கு






9வது மகளிர் ஆசியக் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியுள்ளது. இந்திய அணிக்கு எதிரான இடம்பெற்ற ஆசியக் கிண்ண இருபதுக்கு 20 ஓவர் இறுதிப்போட்டியில் இலங்கை அணி, இந்திய அணியை 08 விக்கெட்டுக்களால் வீழ்த்தி ஆசியக் கிண்ணத்தை முதல் முறையாக வென்றுள்ளது.

தம்புள்ளை ரங்கிரி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிப்பெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் Smriti Mandhana அதிகபட்சமாக 60 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் Kavisha Dilhari 02 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பின்னர் 166 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் Harshitha Samarawickrama ஆட்டமிழக்காமல் அதிகபட்சமாக 69 ஓட்டங்களை பெற்றதுடன், அணித்தலைவர் Chamari Athapaththu 61 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

## மகுடம் சூட்டிய கல்முனை ஸாஹிரா கல்லூரி



–அஸ்ஹர் இப்றாஹிம்–

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 20 வயதிற்குறப்பட்ட மற்றும் 17 வயதிற்குறப்பட்ட பிரிவில் கலந்து கொண்ட ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டதோடு தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகினர். திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் தசாப்தகால வரலாற்று வெற்றிகளுக்கு உறுதுணையாக நின்று மாணவர்களுக்கு பயிற்சியளித்து, தெரிவு செய்து போட்டிக்கு தயார்படுத்தி அழைத்துச் சென்ற சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ்.எம்.சுஹ்தான், பாடசாலையின் சதுரங்க விளையாட்டு பொறுப்பாசிரியர்களான எம்.வை.எம்.றகீப் மற்றும் எச்.எம்.ஜெமீன் ஆகியோரை வாழ்த்துவதோடு, இவ்வரலாற்று வெற்றியை பெற்றுந்தந்த மாணவர்களான (20 வயதிற்குட்பட்ட பிரிவு) ஐ.எம்.சம்லி சாஹி, எம்.ஏ.தமீம், எம்.என்.எம்.றீமாஸ், ஏ.ஆர்.ஏ.சிமர், எம்.ஏ.ஏ. அல்பர், எம்.எம்.அஹ்சப் ஹபி, ஏ.ஆர்.ஏ.றாசிம் (17 வயதிற்குட்பட்ட பிரிவு) எம்.இஷட், எம்.சானிப், ஐ.கே.எம்.ஆக்கில் கான், ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத், எம்.ஜே.ஐ.சஹ்மி, ஏ.அர்ஹம் பர்வீஸ், என்.அப்துல்லாஹ் சப்கி, எம்.அம்ஹர் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

## தேசிய மட்டத்துக்கு தெரிவு



–நூருல் ஹுதா உமர்–

திருகோணமலை மெக்கெய்சர் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 25,26,27ஆம் ஆகிய தினங்களில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெட்மின்டன் போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடி 18 வயதுக்குட்பட்ட பிரிவில் இரண்டாம் இடத்தை பெற்று கிழக்கு மாகாணத்தில் தனக்கான அடையாளத்தை நிருபித்து தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ் அடைவிற்காக உறுதுணையாய் இருந்து மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் மற்றும் பிரதி அதிபர்கள், மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வழிப்படுத்திய பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஏ.எம். அப்ராஜ் றிலா, எம்.எச்.எம். முதன்சீர் மற்றும் போட்டிகளில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, போட்டிகளில் பங்கேற்க தேவையான உதவிகளை மேற்கொண்ட பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு மற்றும் பழைய மாணவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

## சதுரங்கப் போட்டியில் வரலாற்றுச் சாதனை

–நூருல் ஹுதா உமர்–

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க போட்டிகள் ஜுலை 27,28,29ஆம் தினங்களில் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த போட்டி நிகழ்ச்சிகளில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகள் 20 வயதிற்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சாம்பியன் பட்டத்தையும் 17 வயதிற்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் ரன்னர்–அப் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாகாணமட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை தேசிய மட்ட போட்டிகளுக்கு ஊக்கப்படுத்தி கௌரவப்படுத்தும் நோக்கில் மஹ்மூத் மகளிர் கல்லூரி சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை, கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நிந்தவூர் கோட்டக்கல்விப் பணிப்பாளரும் கல்முனை வலய கல்வி பணிமனையின் உடற்கல்வி பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரீஸ், விஷேட அதிதியாக கல்முனை வலய கல்வி பணிமனையின் உடற்கல்வி ஆசிரிய வளவாளர் ஏ. முகம்மது அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14யில் அமைந்துள்ள மெற்றோ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.08.03ம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.